NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu,* p3
**Date:** 15 January 2016

# இணையப் பாதுகாப்புக்கு புதிய ஆய்வுக்கூடம்

தேசிய பல்கலைக் கழகத்தில் இணையப் பாதுகாப்புக்கான ஆய்வுக்கூடம் ஒன்று இவ்வாண்டு இறுதிக்குள் தயாராகி விடும். இந்த ஆய்வுக் கூடத்தில் இணையப் பாதுகாப்பை மேம்படுத்தும் சோதனைகளும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்படும்.

ஏ'ஸ்டார் தலைவர் லிம் சுவான் போ நேற்று இதனை தெரிவித்தார்.

தேசிய பல்கலைக்கழக கணினி பள்ளியில் அமையும் ஆய்வுக்கூடம் இவ்வாண்டு இறுதிக்குள் செயல்படத் தொடங்கும் என்று திரு லிம் கூறினார்.

தேசிய ஆய்வு உள்கட்டமைப்பை பகிர்ந்துகொள்ளும் நிலையமாகவும் அது இருக்கும். மேலும் உள்ளூர் இணையப் பாதுகாப்பு ஆய்வுச் சமூகத்தினர் ஒன்றுகூடி செயல்படுவதற்கும் பாதிப்புகளை மதிப்பிடும் ஆய்வுகளுக்கு இடமாகவும் ஆய்வுக் கூடம் இருக்கும்.

இணையப் பாதுகாப்பு சோதனைகளுக்கு தகவல் தொகுப்பு நிலையமாகவும் அது செயல்படும்.

சிங்கப்பூரின் இணையப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் கூட்டு ஆய்வுத் திட்டங்களில் பங்கேற்கவும் அனைத்துலக இணையப் பாதுகாப்பு ஆய்வு குழுக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் தொழில்நுட்ப, வடிவமைப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இரண்டு நாள் சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு ஆய்வு, உருவாக்க மாநாட்டில் திரு லிம் பேசினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.